Koviloor Digital Library

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை   உ   ஓம் சிவாய நம :

Dolphin Public School மதுரை

திருமுறைகள் தந்த திருநாரையூர்
ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்

A.No. 18175
42:11

மதுரை டால்ஃபின் ராமனாதன் அறக்கட்டளை சார்பில் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு சிறப்பு வெளியீடு - 29-8-2014

உ

Koviloor Digital Library

ஓம் சிவாய நம :

ஸ்ரீ ஸௌந்தரேசர்

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி

Dolphin Public School மதுரை

Koviloor Digital Library

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை   உ   ஓம் சிவாய நம :

3-2

Dolphin Public School மதுரை

திருமுறைகள் தந்த திருநாரையூர்
ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்

Dolphin Public School மதுரை

3-2

A.No: 18175
42:11

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOO[R]
A. No. ....

மதுரை டால்ஃபின் ராமனாதன் அறக்கட்டளை சார்பில் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு சிறப்பு வெளியீடு - 29-8-2014

Koviloor Digital Library
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

திருமுறைகள் கண்டருளிய ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்
(சுயம்புமூர்த்தி - கோயில் அதிசயம்)
நாரை முக்தி பெற்ற ஸ்தலம்
நம்பியாண்டார் நம்பிகள் அவதார ஸ்தலம்
திருநாரையூர், காட்டுமன்னார் கோவில் (வட்டம்), கடலூர் மாவட்டம்

விநாயகர் வணக்கம்

என்னை நினைந்தடிமை கொண்டுஎன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். - நம்பியாண்டார் நம்பிகள்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

Koviloor Digital Library

தலம் அமைவிடம்

'திருநாரையூர்' என்னும் திருத்தலம், சிதம்பரம் – திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் சிதம்பரம் - காட்டுமன்னார்கோவில் இடையே சிதம்பரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவிலும், காட்டுமன்னார்கோவிலிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. பேருந்து வசதி நிரம்ப உள்ளது.

தல சிறப்புகள்

திருநாரையூர் திருத்தலம் தேவாரப்பாடல் பெற்ற, சோழ நாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்களில் 33-வது திருத்தலமாக விளங்குகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளின் மூன்று பதிகங்களும், அப்பர் பெருமானின் இரண்டு பதிகங்களும் கொண்ட இத்திருத்தலத்து இறைவன் திருநாமம் **'ஸ்ரீ சௌந்தரேஸ்வரர்'**. அம்பிகையின் திருநாமம் **'ஸ்ரீ திரிபுர சுந்தரி'.** இத்தலத்தின் சிறப்புகளை சற்று விரிவாக காண்போம்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

Koviloor Digital Library

திருநாரையூர் – பெயர் வந்த காரணம்

தவசிரேஷ்டரான துர்வாச முனிவர் ஒரு சமயம் ஆழ்ந்த தவத்தில் இருந்தார். அச்சமயம், ஆகாய மார்க்கமாக கந்தர்வர்கள் சிலர் பறந்து சென்றார்கள். அவர்களில் தேவதத்தன் என்னும் கந்தர்வன் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு கொட்டைகளை கீழே போட, அவை மகரிஷி துர்வாச முனிவரின் மேல் விழுந்து முனிவரின் தவம் கலைந்தது. கண் திறந்த முனிவர் மிகுந்த சினம் கொண்டு அந்த கந்தர்வனைச் சபித்தார்; 'பழக் கொட்டையைப் பறவை போல் உதிர்த்த நீ நாரையாய்ப் போகக் கடவது!' எனச் சாபமிட்டார். முனிவரின் சாபம் உடனடியாகப் பலித்துவிட்டது. கந்தர்வன் நாரையாக உருமாறினான். நாரை தன் பாவத்துக்கு விமோசனம் வேண்ட, முனிவரே வழி சொன்னார் : 'இங்கே இருக்கும் பெருமானுக்கு தினமும் கங்கை நீரைக் கொண்டுவந்து அபிஷேகம் செய்தால் உனக்கு சாப விமோசனம் கிடைக்கும்' என வழிகூறி அருளினார். நாரையும் அப்படியே செய்து

இறைவனை பூஜித்து வந்தது. ஒரு நாள், இறைவனின் சோதனையால் காசியிலிருந்து கங்கை நீர் கொண்டு வரும் போது பெரும் மழை பெய்து, கடும் புயலும் வீசியது. அதனால், நாரை பறக்க முடியாமல் தவித்தது. அதன் சிறகுகள் ஒவ்வொன்றாக காற்றில் பிய்ந்து விழுந்தன.அவ்வாறு சிறகுகள் விழுந்த இடம் **'சிறகிழந்தநல்லூர்'** என்று வழங்கப்பட்டு வருகிறது. அந்த ஊர் இப்போதும் திருநாரையூரிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு அருள்பாலிக்கும் இறைவனின் திருநாமம் **'ஸ்ரீ ஞானப்புரிஸ்வரர்'**.இறைவியின் திருநாமம் **'ஸ்ரீ ஞானாம்பிகை'**. சிறகுகளே இல்லாத நாரை தவழ்ந்து வந்து சிவனை வழிப்பட்டு மோட்சம் பெற்றது. அதனால் இந்த ஊர் **'திருநாரையூர்'** என்று அழைக்கப்படுகிறது. நாரைக்கு அருள் செய்த இத்தலத்து இறைவன் சுயம்புவாக தோன்றியதால் **'ஸ்ரீ சுயம்பிரகாசர்'** எனவும் வழங்கப்படுகிறார்.

Koviloor Digital Library

ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்

ஸ்ரீ சௌந்தரேஸ்வரரின் சந்நிதிக்குத் தென்மேற்கு திசையில் தனிச் சந்நிதியில் **'ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்'** தரிசனம் தருகிறார். நல்லார்க்கும், பொல்லார்க்கும் நலம் கொடுக்கும் அந்நாயகரைப் பொல்லாதவர் எனலாமோ? அவரது உண்மை திருநாமம் பொள்ளாப் பிள்ளையார் என்பதே. அதுவே தற்போது மருவி பொல்லாப்பிள்ளையார் என வழங்கப்படுகிறது. பொள்ளாத - என்றால் உளியால் செதுக்கப்படாத அல்லது கல்லைப் பொளியாமல் தோன்றிய என்று அர்த்தம். இந்த பிள்ளையார் உளியால் செதுக்கப்படாமல் சுயம்புவாக தானே தோன்றிய காரணத்தால் **'ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்'** என அழைக்கப்படுகிறார். ஸ்ரீ சுப்பிரமணியருக்கு எவ்வாறு அறுபடை வீடுகள் உள்ளனவோ, அதுபோலவே ஸ்ரீ விநாயகருக்கும் உண்டு.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

Koviloor Digital Library

ஸ்ரீ விநாயகர் அறுபடை வீடு வெண்பா

கூறு திருவருணை
கூப்பாமுது குன்றம் வீறு
திருக்கடவூர் விண் முட்டும்
தேறுதமிழ் மாமதுரை
காசிமருவு திருநாரையூர் வேழ
முகத்தாறு படைவீடு.

அதில் முதன்மையானது '**திருநாரையூர்**' மற்ற ஸ்ரீ விநாயகர் தலங்கள் **'திருவண்ணாமலை' (ஸ்ரீ அல்லல் தீர்க்கும் விநாயகர்), 'திருக்கடவூர்' (ஸ்ரீ கள்ள விநாயகர்), 'மதுரை' (ஸ்ரீ சித்தி விநாயகர்), 'திருமுதுக்குன்றம்' (ஸ்ரீ ஆழத்து விநாயகர்), 'காசி' (ஸ்ரீ துண்டி ராஜ விநாயகர்)** ஆகியவையாகும். ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார் இல்லாவிட்டால் தேவாரப்பாடல்கள் நமக்கு கிடைத்திருக்காது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமநாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

Koviloor Digital Library

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி

ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார் சந்நிதியில் பக்தியுடன் தினமும் பூஜித்து வந்தார் ஆதி சைவர் மரபில் தோன்றிய **'அனந்தேசர்'.** இவரின் துணைவியார் **'கல்யாணி'** அம்மையார். இவர்களது புதல்வன் **'நம்பி'** தினந்தோறும் நைவேத்தியத்தைக் கோயிலில் விநியோகித்தே திரும்புவார் அனந்தேசர். பிரசாதம் கேட்கும் தன் புதல்வன் நம்பியிடம் ' பிள்ளையார் சாப்பிட்டுவிட்டார்' எனப் பதில் சொல்வார் தந்தை. ஒருமுறை தந்தை வெளியூர் போக, சிறுவன் நம்பி பக்தியுடன் பூஜை செய்துவிட்டு, தாயார் கொடுத்த நைவேத்தியத்தைப் பிள்ளையார் முன் வைத்து விநாயகர் பெருமானை சாப்பிடும்படி வேண்டினான் ! பிள்ளையார் சாப்பிடவில்லை. மன்றாடினான். தான் ஏதோ தவறு செய்துவிட்டதால்தான் பிள்ளையார் உணவை ஏற்க மறுக்கிறார் என்று எண்ணி வேதனையுடன் விழுந்து, புரண்டு அரற்றினான். தலையை கல்லில் முட்டி, மோதி அழுதான். தும்பிக்கை நாதன் தம் தாளில் நம்பிக்கை

Kovjloor Digital Library

வைத்த நம்பியைத் தம் திருக்கரத்தால் தாங்கித் தடுத்தருளி **'நம்பி பொறு'** என கூறி துதிக்கையை வலப்புறமாக நீட்டி சாப்பிட்டார். மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பிய நம்பி, விஷயத்தைத் தாயாரிடம் சொன்னான். எப்படி நம்புவாள் அவள்? மறுநாள் நம்பியின் தந்தை மறைந்திருந்துப் பார்க்க மீண்டும் அதே அற்புதம் நடைபெற்றது. நம்பி சமர்ப்பித்த நைவேத்தியத்தை தும்பிக்கை பிரான் ஏற்று உண்ட காட்சியைக் கண்டு மெய் சிலிர்த்தார் அனந்தேசர். மகனைக் கட்டிக்கொண்டார். நாளுக்கு நாள் நம்பிக்கும் பிள்ளையாருக்கும் நெருக்கும் வளர்ந்தது. விநாயகர் திருவருளால் எல்லாக் கலைகளும் நம்பிக்கு எய்தின.

**"என்னை நினைந்தடிமை கொண்டேன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசு மகிழ் சோலை வியன் நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்திமுகத்தான்".**

Koviloor Digital Library

என்று ஆரம்பிக்கும் **"திருநாரையூர்" விநாயகர் திருஇரட்டை மணிமாலை"** உட்பட பத்து நூல்களை விநாயகர் அருளால் **'ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி'** இயற்றினார். **அந்த பரம பக்திமான் அவதரித்த திருத்தலமும் இதுவே !** ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார், ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி, சோழ பேரரசன் இராஜ ராஜ சோழன் இவர்கள் இருவர் மூலமாக தேவாரத் திருமுறைகளை நமக்கு கிடைக்கச் செய்தார். அந்த வரலாற்றை இனி காண்போம்.

திருமுறை தந்த தலம் :

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியின் சிறப்புகள் இராஜ ராஜ சோழனின் காதுகளுக்கு எட்டியது. சைவ திருமுறைகளின் இருப்பிடம் தேடி அவற்றைத் தொகுக்கும் மாபெரும் பணியை முடித்துவிட வேண்டும் என்ற அவனது நெடுநாளைய ஆசைக்கு ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வந்தான். இராஜ ராஜ சோழனின் காணிக்கைகளையும்

Koviloor Digital Library

நைவேத்தியங்களையும் நம்பியின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்து ஏற்றார், ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார். 'திருமுறை இருக்கும் இடம் காட்டி அருள வேண்டும்' என்று இராஜ ராஜனும், நம்பியும் வேண்ட, 'தில்லை ஸ்ரீ நடராஜர் ஆலயத்தின் தென்மேற்கு மண்டபத்தில் சுவடிகள் கிடைக்கும்' என தெய்வவாக்கு ஒலித்தது. (இன்றும் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயத்தின் மேற்கு உள் பிரகாரத்தில் ஸ்ரீ திருமுறை காட்டிய விநாயகர்' சந்நிதி அமைந்துள்ளது.)

இராஜராஜன், தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று திருமுறை தொகுக்க அனுமதி கேட்டான். அவர்கள் சொல்படி சைவ மூவர் சிலைகளை வடித்து வைத்து பூஜித்து அவற்றின் முன்னிலையில் திருமுறைச் சுவடிகள் இருந்த அறையை திறக்கச் செய்தான். திறந்தவுடன் ஏடுகள் புற்றால் மூடியிக்கக் கண்டு திடுக்கிட்டு, உள்ளம் நொந்தனர். 'இக்காலத்துக்குத் தேவையானவற்றை மட்டும் வைத்துப் பிறவற்றைச் செல்லரிக்கச்

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

Koviloor Digital Library

செய்தோம்' என்ற திருவருள் வாக்கால் ஒருவாறு அமைதிபெற்றனர். திருநாரையூர் நம்பியைக் கொண்டு அவற்றை பதினோரு திருமுறைகளாய்த் தொகுக்கச் செய்தான். தொகுத்த தேவாரப் பதிகங்களுக்கு, பண்முறை அமைக்க விரும்பிய நம்பியும் அரசனும் திருஎருக்கத்தம்புலியூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை' வேண்டினார்கள். (திருஎருக்கத்தம்புலியூர் என்னும் ஸ்தலம் தற்போது இராஜேந்திரப்பட்டினம் என வழங்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் சுவாமிகள் பதிகம் பெற்ற நடுநாட்டு ஸ்தலம் இது. இறைவன் திருநாமம் 'ஸ்ரீநீலகண்டேஸ்வரர்'. இறைவி திருநாமம் 'ஸ்ரீ நீலமலர்க்கண் அம்மை' இத்தலம் விருத்தாசலத்திற்கு அருகில் அமைந்துள்ளது). 'திருநீலகண்ட பெரும்பாணன் மரபில் பிறந்த ஒரு பெண்ணுக்கு (பாடினி) பண்களை அருளினோம். இத்தலத்திலுள்ள அப்பெண்ணை அழைத்துச் சென்று பதிகங்களுக்குப் பண்முறை அமைக்கச் செய்வீர் என்று தெய்வவாக்கு கிடைத்தது. (இப்பெண் பிறவியிலேயே வாய் பேச முடியாதவள்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

இப்பெண்ணிற்கு இறைவன் அருள் புரிந்து பதிகங்களுக்கு பண்முறை அமைக்கச் செய்து அப்பண்ணோடு திருமுறை பாட அருள் புரிந்தார்) மனம் மகிழ்ந்த மன்னனும் நம்பியும் அத்தலத்திலுள்ள அந்த பெண்ணைக் கண்டறிந்து தில்லை கனகசபைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு எல்லோரது முன்னிலையிலும் அப்பெண்ணைக் கொண்டு தேவாரப் பதிகங்களுக்கு, பண்முறைகளை முறையாக அமைக்கச் செய்தனர்.

இன்று தேவாரப் பதிகங்கள் தக்கப்பண்களுடன் நமக்கு கிடைக்க ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி, இராஜ ராஜ சோழன் இவர்கள் இருவர் மூலமாக அருளியவர் திருநாரையூர் ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்.

விழாக்கள் :

தினசரி ஐந்துகால பூஜைகள் நடைபெறுகின்றது. சங்கடஹர சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, கிருத்திகை, ஐப்பசி கந்தர் சஷ்டி விழா, பிரதோசம், மகா

Koviloor Digital Library

சிவராத்திரி, நவராத்திரி முதலியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் 'வைகாசித் திங்கள் புணர்பூச நட்சத்திரத்தில் (ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி முக்தி அடைந்த நாள்) நம்பி குருபூஜை விழா' சிறந்த திருமுறை விழாவாக கொண்டாடப்படுகின்றது. 'நாரை முக்தி அடைந்த வைகாசி விசாகம்' அன்றும் ஒவ்வொரு வருடமும் சிறப்பு வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒவ்வொரு சங்கடஹர சதுர்த்தி அன்றும் கடந்த எட்டு வருடங்களாக அன்னதானம் நடைபெறுகின்றது.

சங்கடஹர சதுர்த்தி :

இத்தலத்து ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையாரை வழிபடுவதன் மூலம் அனைத்து விதமான நமது சங்கடங்களும், சிக்கல்களும், நோய்களும் தீரும் என்பது கண்கூடான உண்மை. குறிப்பாக சங்கடஹர சதுர்த்தி அன்று பிரார்தனா மூர்த்தியான ஸ்ரீ பொள்ளாப்பிள்ளையாரை வழிபட்டு பலனடந்தவர்கள் ஏராளம்,அன்று ஸ்ரீ பொள்ளாப்பிள்ளையாருக்கு விசேஷ பூஜைகள்

Koviloor Digital Library

நடைபெறும். மேலும் அன்று இரவு வானில் இருக்கும் சந்திரனுக்காக ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார் சந்நிதிக்கு வெளியே ஒரு குத்துவிளக்கு ஏற்றி, நிலாவை நோக்கி தீபாரதனை காட்டுவார்கள். இதை தரிசித்தபின்பு தான் பக்தர்கள் தங்கள் விரதத்தை நிறைவு செய்வார்கள்.

'நாரையூர் நாதனை நாடி தொழுவோர்க்கு நாளும் கோளும் நன்மை புரியுமே' என்பதற்கு ஏற்ப இத்தலத்து ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையாரை வழிபடுவதன் மூலம் நம் வாழ்வு ஏற்றம் அடையும் என்பது உறுதி.

தரிசன நேரம் :

மன அமைதியின்மையும், சந்தேகங்களும், பயமும், அவநம்பிக்கையும், அன்றாடம் நம்மை அழுத்தும் நவநாகரீக வாழ்க்கையில் திருநாரையூர் போன்ற திருத்தலங்களுக்குச் சென்று வருவது நமக்கு புத்துணர்வு தரும்.

Koviloor Digital Library

காலை 6-00 மணி முதல் பகல் 11-00 மணி வரையிலும், மாலை 4-30 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும்.

நாரைக்கு மோட்சம் அளித்த நாதரையும், நம்பிக்கு அருளிய விநாயகரையும் வாழ்வில் ஒருமுறையேனும் தரிசித்து புண்ணியம் அடைவோம்.

நாரையூர் வருக ! நலம் பல பெறுக!



Koviloor Digital Library

நம்பியாண்டார் நம்பி அருளியது

(பாசுரங்கள் 1036 - 1419)

நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத் 1
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.

முகத்தாற் கரியன்என் றாலும் தனையே முயன்றவர்க்கு 2
மிகத்தான் வெளியன்என் றேமெய்ம்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்தஎம்மான்
உகத்தா வைன்தன் உடலம் பிளந்த ஒருகொம்பனே.

Koviloor Digital Library

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே 3
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலம் செய்துகொளும் தாழ்தடக்கை யாய்என்நோய்
பின்னவலம் செய்வதெனோ பேசு.

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியும்என் 4
றேசத் தகும்படி ஏறுவ தேயிமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும் நுந்தையும் நீயும்இந்தத்
தேசத் தவர்தொழு நாரைப் பதியுள் சிவக்களிறே.

களிறு முகத்தவனாய்க் காயம்செந் தீயின் 5
ஒளிறும் உருக்கொண்ட தென்னே - அளறுதொறும்
பின்நாரை யூர்ஆரல் ஆரும் பெரும்படுகர்
மன்நாரை யூரான் மகன்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை ✆ 9345169639

Kovilsoor Digital Library

மகத்தினில் வானவர் பல்கண் சிரம்தோள் நெரித்தருளும் 6
சுகத்தினில் நீள்பொழில் நாரைப் பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கைஅந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது போலும் அடுமருப்பே.

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும் 7
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்.

மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப் 8
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதியரன் தன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை வாழ்த்துவனே.

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத் 9
தனஞ்சாய லைத்தருவான் அன்றோ - இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்தோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம்.

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத் 10
தேரண வும்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேஎம் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென் பவர்க்கில்லை அல்லல்களே.

அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின் 11
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர் கட்டும் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ.

கோவிற் கொடிய நமன்தமர் கூடா வகைவிடுவன் 12
காவிற் திகழ்தரு நாரைப் பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத் தொற்றை மருப்பின் முக்கண்
ஏவிற் புருவத் திமையவள் தான்பெற்ற யானையையே.

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை 13
தானே சனார்த்தனற்கு நல்கினான் - தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன்ஏந்தி
எடுத்த மதமுகத்த ஏறு.

ஏறிய சீர்வீரணக்குடி ஏந்திழைக் கும் இருந்தேன் 14
நாறிய பூந்தார்க் குமரற்கும் முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பால்தொழு நாரைப் பதியுள் விநாயகனே.

கனமதில் சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார் 15
மருவி னான்பயந்த வாய்ந்த - சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசார மோசொல்லு வான்.

வானிற் பிறந்த மதிதவ ழும்பொழில் மாட்டளிசூழ் 16
தேனிற் பிறந்த மலர்த்திரு நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பர்இவ் வையகத்தே.

வையகத்தார் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து 17
பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து - கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தை அமர் வான்.

Koviloor Digital Library

அமரா அமரர் தொழுஞ் சரண் நாரைப் பதிஅமர்ந்த 18
குமரா குமரர்க்கு முன்னவ னேகொடித் தேர்அவுணர்
தமரா சறுத்தவன் தன்னுழைத் தோன்றின னேஎனநின்
றமரா மனத்தவர் ஆழ்நர கத்தில் அழுந்துவரே.

அவமதியா துள்ளமே அல்லலற நல்ல 19
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் - நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில் சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன் சீர் நாம்.

நாந்தன மாமனம் ஏத்துகண் டாய் என்றும் நாண்மலரால் 20
தாந்தன மாக இருந்தனன் நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேஐந்து செங்கைய னேநின் திரள்மருப்பை
ஏந்தின னேஎன்னை ஆண்டவ னேஎனக் கென்னையனே.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... (தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை © 9345169639

Koviloor Digital Library

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

திருமுறைகள் தந்த திருநாரையூர் ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்

* வாழ்க்கை தத்துவம் *

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்! வேண்டும்!

நன்றி : டாக்டர் வ.சுப. மாணிக்கம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILUR
A. No. 18175

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... டால்ஃபின் AR. ராமனாதன்

டால்ஃபின் பள்ளி

தி கிளாஸிக் பிரிண்டர்ஸ் மதுரை போன் 2323819

உ

ஸ்ரீ மந் ... சிவாய நம :

Koviloor Digital Library

தேவகோட்டை அரு.லெ.வீடு டால்ஃபின் ராமனாதனின்

ஐயா SV.RM.AR. ராமனாதன் செட்டியார்

அப்பத்தா
RM. விசாலாட்சி ஆச்சி

ஆயா வீட்டு ஐயா பெ. வீடு
வீரப்ப சுவாமிகள்

தந்தை
AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்

பெரிய தாயார்
AR. சௌந்தரம் ஆச்சி

தாயார் மீனாட்சி ஆச்சியின் அப்பத்தா
கண்டனூர் மீனாட்சி பாட்டி

இவர்களின் ஆசிகளுடன் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில் சிறப்பு நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இவண்

AR. ராமனாதன்

எந்த வெளியீடும் வரிசையில் ஒன்றாக
சான்றோர் என ஏட்டத்தகும்.

மதுரை
23.4.2010

நல்வாழ்த்துடன்
23.4.2010

AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமனாதனின் தாயார்

Koviloor Digital Library



தேவகோட்டை அரு. ராமனாதனின் தந்தை
தெய்வத்திரு. அரு.ராம.அரு. அருணாச்சலம் செட்டியார் மற்றும்
பெரிய தாயார் அரு. சௌந்தரம் ஆச்சி அவர்களின் நல்லாசிகளுடன்...
மதுரை டால்ஃபின் AR. ராமனாதன்

கல்விப் பணியில்... தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்... 28ம் ஆண்டு

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில்...

AR. ராமனாதன்

டால்ஃபின் **AR. ராமனாதன்,** மேனேஜிங் டிரஸ்டி
(தேவகோட்டை) டால்ஃபின் ராமனாதன் சேரிடபிள் டிரஸ்ட், மதுரை - 16.
(பதிவு எண் 144 / 2014). அரசரடி, S.S. காலனி, மதுரை - 16.
டால்ஃபின் பள்ளி, மதுரை - 16.
Ph – 93451 69639, 99439 25200
Email: dolphinschool2009@gmail.com
Web: www.devakottaidolphinramanathan.com

Dolphin Public School

AR. ராமனாதன்

நல்லாசியுடன்
23.4.2010

AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமனாதனின் தாயார்

கிளாஸிக் மதுரை போன் 2323819